**DEPOSITION OF WITNESS**

Judicial form No,53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI**

| C.C.153/2020 | |
|---|---|
| Deposition of Witness for | அ.சா. 1 / புகார்தாரர் |
| பெயர் | பாத்திமா |
| தொழில் | |
| தகப்பனார் பெயர் | |
| கணவர் பெயர் | அப்துல் ரகுமான் |
| கிராமம்: காளிப்பாளையம் | ஜாதி : |
| தாலூக்கா : திருப்பூர் | இனம் : |
| மாவட்டம் திருப்பூர் | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969, (Central Act 44 of 1969) on 09.08.2024.

Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு டைலராக வேலை பார்க்கிறேன். கடந்த 12.03.2020 ஆம் தேதி மதியம் 2.30 மணியிருக்கும் அன்றைய யதினம் சடொன் என்பதால் வீட்டிற்குள் இருக்க முடியாமல் வெளிவே வந்து வேப்பமரத்தின் அடியில் உட்காருவதற்காக வந்தேன்.

எதிரி என் வீட்டின் பக்கத்து வீட்டுகாரர். அப்போது பேன்டின் சிப்பை அவிழ்த்து வந்து 100 தரேன் 200 தரேன் வா தேவுடியா அவுசாரி வா என்று கூப்பிட்டார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிப்பறிவு இல்லை. புகாரை நான் எழுதவில்லை என்றால் நான் சொல்ல சொல்ல வந்தவர் எழுதிக்கொடுத்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் 2 முதல் 2.30 மணி இருக்கும் என்றால் சரிதான். அப்போது வீட்டில் நான் மட்டும்தான் இருந்தேன் என்றால் சரிதான். என் கணவர் தங்கள் வேலைக்காக சென்றுவிட்டார். எனக்க எத்தனை குழந்தைகள் என்றால் 2 மகன் 1 மகள். மகன்கள் என்ன செய்கிறார்கள் என்றால் ஆல்வோபிளாக் நிறுவனத்திற்கு வேலைக்கு செல்கிறாாகள். சம்பவ தினத்தன்று என் மகன்கள் வேலைக்கு சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். என் மகள் வீட்டில்தான்இருந்தார் என்றால் பாட்டி வீட்டில் இருந்தார்.

சம்பவ தினத்தன்று சட்டொன் என்பதை என்னுடைய புகரிலும் போலீஸ் ள விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எழுதிய புகாரை எனக்கு படித்து காட்டினார்களா என்று கேட்டால் படித்து காட்டினார், அந்த நேரத்தில் சரியாக தெரியவில்லை.

முதல் விசாரணிடியல் சொன்னது போல் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் அந்த நேரத்தில் மேற்படி சம்பவம் நடந்தது குறித்து பின்னிட்டு அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் நான் சொன்னேன் என்றால் அக்கம் பக்கம் சொல்லிவிட்டு காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க வந்தேன்.

அக்கம் பக்கம் சொல்லிவிட்டு நான் காவல் நிலையத்திற்கு போன் செய்தேன். ரோந்து போலீசார் வந்து அவரை காவல் நிலையம் வரசொல்லிவி்டு சென்றார்கள். போலீஸ் விசாரணை செய்த பிறகுதான் நான் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். என் வீடு தனி காம்பவுண்டுக்குள் உள்ளது என்றால் சரிதான்.

தனலட்சுமி செல்வி ஆகியோருக்கு சத்தம் கேட்டு தெரிந்தது என்றால் சரிதான்.என் வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கம் 5 கி.மீ தூரம் இருக்கும். நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன்

என்றால் சரிதான். தனலட்சுமி வீட்டிற்கும் என் வீட்டிற்கம் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 10 நிமிடத்தில் சென்றுவிடலாம். செல்வி வீடு என் வீட்டிற்கு பின்னால் கொஞ்சம் தள்ளி உள்ளது. அந்த வீட்டிற்கு செல்ல 10 நிமிடம் ஆகும்.

மேற்கண்ட இரண்டு வீடும் வெவ்வேறு திசையில் உள்ளது என்றால் சரிதான். எனக்கும் எதிரி குடும்பத்தாருக்கம் ஏற்கனவே சண்டை இருந்ததா என்றால் இல்லை. குடிவ ந்து 6 மாதத்தில் பிரச்சனை ஆனது.

எங்களுக்கும் எதிரிக்கும் இடையே ஏற்கனவே முன்பகை இருந்தது என்றும் அதன் காரணமாலக நான் பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் எதிரி மீது பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இ்வ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் அவர் கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு அவரிடம் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையொப்பமிட்டார்.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2024.08.09 20:33:24 +0530

நீதித்துறை நடுவர்,
(முழு கூடுதல் பொறுப்பு)
அவிநாசி.

DEPOSITION OF WITNESS

Judicial form No,53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI**

| C.C. 153/2020 | |
|---|---|
| Deposition of Witness for | அ.சா. 2 /பார்வை மகஜர் சாட்சி |
| பெயர் | மணிகண்டன் |
| தொழில் | |
| தகப்பனார் பெயர் | கனேஷ் |
| கணவர் பெயர் | |
| கிராமம்: காளிப்பாளையம் | ஜாதி : |
| தாலூக்கா : திருப்பூர் | இனம் : |
| மாவட்டம் திருப்பூர் | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969, (Central Act 44 of 1969) on 09.08.2024.

Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். கடந்த 12.03.2020 ஆம் தேதி இரவு 10.00 மணி அளவில் நான் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்த போது போலீசார் என்னிடம் வந்து ஒரு கையொப்பம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**குறுக்கு விசாரணை**

சம்பவத்தை பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவ

இடத்தை அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்டதில் என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டதால் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான்.

சாட்சியின் கையொப்பம்

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் அவர் கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு அவரிடம் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையொப்பமிட்டார்.

S VADIVEL

Digitally signed by S VADIVEL
Date: 2024.08.09 20:33:33 +0530

நீதித்துறை நடுவர்,
(முழு கூடுதல் பொறுப்பு)
அவிநாசி.

DEPOSITION OF WITNESS

Judicial form No,53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI**

| C.C. 153/2020 | |
|---|---|
| Deposition of Witness for | அ.சா. 3 / பார்வை மகஜர் சாட்சி |
| பெயர் | பாலகுருசாமி |
| தொழில் | |
| தகப்பனார் பெயர் | சுந்தர்ராஜ் |
| கணவர் பெயர் | |
| கிராமம்: காளிப்பாளையம் | ஜாதி : |
| தாலூக்கா : திருப்பூர் | இனம் : |
| மாவட்டம் திருப்பூர் | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969, (Central Act 44 of 1969) on 09.08.2024.

Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிறேன். கடந்த 12.03.2020 ஆம் தேதி இரநுவ 9.30 மணி அளவில் நான் வேலை விட்டு வீட்டிற்கு வந்த போது பாண்டி வீட்டிற்கு முன்பாக போலீசார் ஸ்கெட்ச் போட்டு கொண்டிருந்தார்கள். அதற்காக நான் சாட்சி கையெழுத்து போட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜிரல் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ .3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் கையெழு்த்து

போட்டதில் என்ன இருந்தது என்று முழுமையான விபரம் தெரியாது என்றால் சரிதான். போலீசாருக்கு நான் பாண்டியன் வீட்டின் முன்பு அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான்.

சாட்சியின் கையொப்பம்

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் அவர் கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு அவரிடம் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையொப்பமிட்டார்.

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2024.08.09 20:33:42 +0530

நீதித்துறை நடுவர்,
(முழு கூடுதல் பொறுப்பு)
அவிநாசி.